இருமொழிக் கொள்கை:

தமிழ்நாட்டின் மானம் காக்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

மிரட்டலுக்குப் பயந்து அ.தி.மு.க.வை அடகு வைக்கும் எடப்பாடி பழனிசாமி!

சென்னை, மார்ச் 28 - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒன்றிய அரசின் மிரட்டலுக்கு அஞ்சாமல் "இருமொழிக் கொள்கை பணப் பிரச்சினை அல்ல : நம் இனப் பிரச்சினை: இளைய சமுதாயத்தைக் காக்கும் பிரச்சினை; தமிழ்நாட்டின் மானப் பிரச்சினை" என்கிறார். எடப்பாடி அவர்களோ, ஒரு மிரட்டல் வந்தவுடன் அ.தி.மு.க-வையே அடகு வைக்கிறார் !

இது பற்றிய விவரம்:

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 25.3.2025 - செவ்வாய்க் கிழமை அன்று, பேரவையில் இரு மொழித் திட்டம் குறித்து உரையாற்று கையில், "இன்று காலையில் நம்மு டைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் டெல்லிக்குச் சென்றிருப்பதாகச் செய்தி வந்திருக்கிறது. டெல்லிக்குச் சென்றி ருக்கும் நேரத்தில் யாரைச் சந்திக்கப் போகிறார் என்ற அந்தச் செய்தியும் வந்திருக்கிறது. அப்படிச் சந்திக்கும் நேரத்தில் இருமொழிக் கொள்கை குறித்து அவர் அங்கே வலியுறுத்த வேண்டும் என்ற வேண்டுகோளை, இந்த அவையின் மூலமாக நான் எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக் கிறேன்" என்று குறிப்பிட்டார்கள்.

எடப்பாடிக்கு அமித் ஷா எச்சரிக்கை!

ஆனால், நேற்று முன்தினம் வெளி வந்துள்ள செய்தி அதற்கு மாறாக உள்ளது. அதாவது, டெல்லி சென்ற நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி அவர்கள், தம்மு டைய கட்சி நிர்வாகிகளுடன் ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்களைச் சந்தித்துச் சால்வை அணிவித்து மகிழ்ந்திருக்கிறார்.

சிறிது நேரத்தில் அவருடைய கட்சி நிர்வாகிகளை வெளியே அனுப்பி விட்டு, அமித்ஷா அவர்கள் எடப்பாடி பழனிசாமியிடம் பேசி இருக்கிறார். அப்போது அமித்ஷா அவர்கள் எதிர்க் கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி யின் உறவினர் ரூ.650கோடி வரி முறைகேட்டில் ஈடுபட்டதாக அமலாக் கத்துறை கண்டுபிடித்து அதற்குரிய ஆதாரங்களையெல்லாம் காட்டி, எச்ச ரிக்கை விடுத்து, பா.ஜ.க. கூட்டணிக்குச் சம்மதிக்க வேண்டும். சம்மதிக்காவிட் டால், மேல்நடவடிக்கை எடுக்கப்படும் என்று மிரட்டப்பட்டுள்ளார்.

> **அமித்ஷா காட்டிய ஆவணங்களைப் பார்த்ததும் எடப்பாடி பழனிசாமியே அதிர்ந்துவிட்டதாகக் கூறப்படுகிறது. இந்த அதிர்ச்சி அமித்ஷா வீட்டில் இருந்து வெளியே வந்த பின்னரும் நீடித்துள்ளது. காரில் செல்லும் வழியில் எடப்பாடி பழனிசாமி யாரிடமும் பேசாமல் சென்றுள்ளார். தம்பித் துரை வீட்டுக்குச் சென்ற பிறகுதான் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு பேசத் தொடங் கினார் என்று கூறப்படுகிறது.**

அந்த மிரட்டலுக்கு அஞ்சி, "பா.ஜ.க. வோடு, கூட்டணி என்ற பேச்சுக்கே இடமில்லை" என்று கூறிவந்த எடப்பாடி பழனிசாமி அவர்கள், பா.ஜ.க.வுடன் கூட்டணிக்குச் சம்மதம் தெரிவித்து வந்த தாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

எடப்பாடி பழனிசாமியின் மகன் மிதுன். அவருடைய (மிதுன்) சகலையின் அப்பா ஈரோட்டைச் சேர்ந்த இராம லிங்கம். இதனால், கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் இராமலிங்கத்திற்கு ஏராளமான கான்ட்ராக்ட்கள் வழங்கப் பட்டன. இந்த இராமலிங்கம் என்பவ ரின் வீடுகளில் அமலாக்கத்துறையும் வருமான வரித்துறையும் சோதனை கள் செய்து பல ஆவணங்களை கைப்பற்றி இருந்தன.

இராமலிங்கத்தின் வீட்டில் வரி ஏய்ப்பு குறித்து கட்டுக்கட்டாக ஆவணங்கள் கைப்பற்றப்பட்டதாகக் கூறப்படுகிறது. மேலும், அ.தி.மு.கவின் மூத்த தலைவர்களின் ஊழல்கள் குறித்தும் ஏராளமான ஆவணங்களை அமலாக் கத்துறை, வருமான வரித்துறை சேகரித்து வைத்திருந்தது. மொத்த ஆவணங்களையும் எடப்பாடி பழனி சாமியிடம், அமித்ஷா காட்டி, எச்சரிக்கும் தொனியில் பேசியதாகக் கூறப்படுகிறது. கூட்டணிக்குச் சம்மதிக்காவிட்டால் அ.தி.மு.க. தலைவர்கள் பலருக்கும் சிக்கல் வரும். முதலில் உங்களிடம் இருந்துதான் ஆரம்பிக்கும் என்று கூறியதாகவும் கூறப்படுகிறது.

ஆவணங்களைப் பார்த்து அதிர்ந்த எடப்பாடி!

அமித்ஷா காட்டிய ஆவணங் களைப் பார்த்ததும் எடப்பாடி பழனி சாமியே அதிர்ந்துவிட்டதாகக் கூறப்படு கிறது. இந்த அதிர்ச்சி அமித்ஷா வீட்டில் இருந்து வெளியே வந்த பின்னரும் நீடித்துள்ளது. காரில் செல்லும் வழியில் எடப்பாடி பழனிசாமி யாரிடமும் பேசா மல் சென்றுள்ளார். தம்பித்துரை வீட் டுக்குச் சென்ற பிறகுதான் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு பேசத் தொடங்கினார். என்று கூறப்படுகிறது.

பா.ஜ.க.விடம் மண்டியிட்ட எடப்பாடி!

மும்மொழிக் கொள்கையை ஏற் றால்தான், சமக்ர சிக்சா திட்டத்திற்கு நிதி தரமுடியும் என்று கூறி ரூ.2,152கோடி நிதியை தமிழ்நாட்டிற் குத் தரமுடியாது என பா.ஜ.க அமைச் சர் ஆணவத்தோடு நாடாளுமன்றத் தில் கூறி மிரட்டிய போதிலும்,

இது பணப் பிரச்சினை அல்ல; நம் இனப் பிரச்சினை; இளைய சமுதாயத்தைக் காக்கும் பிரச்சினை!

எனவே ரூ.2 ஆயிரம் கோடி அல்ல; ரூ.10ஆயிரம் கோடியைக் கொடுத்தா லும் புதிய கல்விக் கொள்கையை, மும் மொழித் திட்டத்தை, இந்தித் திணிப்பை ஒருநாளும் ஏற்கமாட்டோம்; இருமொழிக் கொள்கையை என்றும் கை விடமாட் டோம் எனத் துணிச்சலாகப் பதில்கூறி, தமிழ்நாட்டின் மானத்தைக் காத்தவர் - காத்து வருபவர் நம்முடைய முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

ஆனால், உறவினர் மீது நட வடிக்கை எடுக்கப்படும் என மிரட்டிய உடனேயே எடப்பாடி பழனிசாமி அவர்கள் மண்டியிட்டு பா.ஜ.க.விடம் கூட்டணிக்குச் சம்மதம் தெரிவித்து வந்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக் கின்றனவே!

தமிழ்மொழியைக் காக்க, தமிழ் நாட்டின் இளைஞர்களைக் காக்க, தமிழ்நாட்டின் மானம் காக்க, தமிழ் நாட்டிற்கு எதிரான ஒன்றிய அரசின் மிரட்டலுக்கு அஞ்சாமல் அதை எதிர்த்து நிற்கும் திராவிட நாயகர் முத லமைச்சர் அவர்களுக்கு முன்னால், ஒரு மிரட்டல் வந்ததுடன் தலை கவிழ்ந்து குனிந்து நின்று, பாதம் தாங் கும் பழனிசாமி அவர்கள், தமிழ் நாட்டை ஏற்கனவே, சீர்குலைத்த துடன், மீண்டும் தற்போது, தமிழ்நாட் டுக்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் நிதி தராமல் தொடர்ந்து வஞ்சித்துவரும் ஒன்றிய பா.ஜ.க.வுடன் கூட்டுச் சேரப் பணிந்திருப்பது அ.தி.மு.க.வின் சுயநல ரூபத்தைத்தான் காட்டுகிறது.

இது தமிழ்நாட்டிற்கு நல்லதல்ல.

முழு அதிகாரத்தை ஒன்றிய அரசே வைத்திருப்பது ஜனநாயகக் கேலிக்கூத்து

புதுச்சேரிக்கு மாநில தகுதி வழங்க வேண்டும்!

சட்டப் பேரவையில் தனித் தீர்மானம் கொண்டுவந்து இரா.சிவா வலியுறுத்தல்!

புதுவை, மார்ச். 28-

புதுச்சேரிக்கு மாநில தகுதி (அந்தஸ்து) கோரி சட் டப்பேரவையில் எதிர்க்கட் சித் தலைவர் இரா. சிவா அவர்கள் தனிநபர் தீர்மா னம் கொண்டுவந்து பேசிய தாவது: -

இந்த 15-வது சட்டப்பே ரவை அமைந்த பிறகு இரண்டாவது முறையாக மாநில தகுதி (அந்தஸ்து) வேண்டி தீர்மானத்தை இந்த அவையில் முன்மொ ழிந்து பேசுவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

தனது கட்சியின் தேர் தல் அறிக்கையில் மாநில அந்தஸ்தை பெற்றே தீரு வோம் என்று அறிவிப்பு செய்து ஆட்சிக்கு வந்த முதல்வர் ரங்கசாமி அவர் கள் அரியணை ஏறி இரண்டு ஆண்டுகள் அத னைப்பற்றி துளிகூட பேசா மல் கிடப்பில் போட்ட நிலையில், எதிர்க்கட்சியைச் சேர்ந்த நாங்கள் தான் என் னவாயிற்று மாநில அந் தஸ்து என்று கேள்வி எழுப்பி இந்த அரசை அதை நோக்கி திருப்பினோம். அதன்விளைவாகத்தான் சென்ற 31.03.2023ல் எங்க ளைப் போன்ற உறுப்பினர் கள் தனிநபர் தீர்மானம் கொண்டுவந்து அரசு அதனை தனது தீர்மானமாக நிறைவேற்றி ஒன்றிய அரசுக்கு அனுப்பியது.

அந்த நிலையில் அன் றைய துணைநிலை ஆளு நர் தமிழிசை சவுந்தர்ரா ஜன் அவர்கள் புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து அவசிய மில்லை என்றும் மாநில அந்தஸ்து கிடைத்தால் என் னென்ன நன்மைகள் கிடைக்குமோ அதை எல் லாம் நானே முன்னின்று பெற்றுக்கொடுப்பேன் என் றும் அரசின் எண்ணத் திற்கு எதிராக பேசி அத் தீர்மானத்தை ஒன்றிய அரசுக்கு அனுப்புவதில் தாமதப்படுத்தினார்கள்.

தீர்மானத்தின் மீது பேசிய முதல்வர் அவர்க ளும் இந்த தகுதியைப் பெறுவதற்கு அனைத்துக் கட்சி சட்டமன்ற உறுப்பி னர்களுடன் டெல்லி சென்று ஒன்றிய அரசை வலியுறுத்துவோம் என்றார் கள். ஆனால் அதற்கான எந்த முயற்சியும் இந்த அரசு மேற்கொள்ளவில்லை என்பதை வருத்தத்துடன் இந்த அவையில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இதன் அடிப்படை காரணத்தை நாம் உணர்ந்து கொள்ள வேண் டும். ஒன்றியத்தில் இருக் கின்ற பா.ஜ.க. அரசு ஆர். எஸ்.எஸ்-சின் சித்தாந் தத்தை பின்பற்று கின்ற அரசு. ஆர்எஸ்எஸ்-ஐ பொறுத்தவரை அதிகாரம் என்பது ஒரே இடத்தில் குவிக்கப்பட வேண்டுமே தவிர பரவலாக்கப்படக் கூடாது என்பதாகும். இந்த நாட்டில் மாநிலங் கள் தொடர்வதைக்கூட ஆர்.எஸ்.எஸ். அனுமதிப்ப தில்லை. வெறும் மாவட் டங்களை வைத்துக் கொண்டு டெல்லியால் அதிகாரம் செய்ய முடியும் என்ற கொள்கையுடையது ஆர்.எஸ்.எஸ். அதனால் தான் விடுதலைப் பெற்ற காலத்தில் இருந்து தனி மாநிலமாக விளங்கிய ஜம்மு காஷ்மீரை 370-ஐ காரணம் காட்டி மாநில தகுதியை பிடுங்கி இரண்டு யூனியன் பிரதேசமாக மாற்றிவிட்டனர்.

ஆளுநர்களை வைத்து மாநில அரசுகளை மிரட்டி யும், செயல்படாமலும் முடக்கி வருகின்றனர். பல முறை உச்சநீதிமன்றம் அர சியல் சட்டப்படி ஆளுநர் கள் மாநில அமைச்சரவை யின் ஆலோசனைப்படி தான் செயல்பட வேண் டும். அவர்களுக்கான தனி யான அதிகாரம் எதுவு மில்லை என்று அறிவித்து ஆளுநர்களின் தலையில் கொட்டு வைத்த பிறகும். மாநில அரசின் கோப்பு களை முடக்குவதும், செயல் பாடுகளை தடுத்து நிறுத்து வதும் ஒன்றிய அரசின் அனுமதியோடு தொடர்ந்து கொண்டிருக்கிறது.

மாநிலத்தின் நிதி மேலாண்மையை ஜி.எஸ். டி. மூலம் பறித்ததும், ஜி.எஸ். டி.யில் இருந்து மாநில பங்கை தர மறுப்பதும் மாநில பட் டியலில் இருந்த கல்வியை பறித்ததும், நில அதிகா ரத்தை பறித்ததுமான செய லபாடுகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

முழு அதிகாரம் பெற்ற மாநிலங்களுக்கு இந்த நிலைமை என்றால் அதிகா ரம் இல்லாத யூனியன் பிர தேசமான புதுச்சேரியின் நிலைப்பற்றி சொல்ல தேவையில்லை. ஒரு பக் கம் நம்மை ஆள்வதற்கு நாமே தேர்ந்தெடுக்கின்ற ஓர் அரசு. மறுபக்கம் நம்மை அதிகாரம் செலுத் தவிடாமல் தடுக்கின்ற ஒன்றிய உள்துறை.

இது எப்படி இருக்கி றது என்றால் இந்தியா விடுதலைப் பெறுவதற்கு முன்பாக ஆங்கிலேயர்கள் இந்த நாட்டை ஆட்சி செய்தபோது உள்ளூர் மக் களும் ஆட்சி அதிகாரத்தில் பங்கு கொடுப்பதை போன்ற அரசு அமையவிட்டு சிறு, சிறு அதிகாரங்களை அவர் களுக்கு கொடுத்துவிட்டு, முழுமையான அதிகா ரத்தை பிரிட்டீஷ் அரசு தன்னிடம் வைத்துக் கொண்டது போல், நம் மையும் அரசமைக்கச் சொல்லிவிட்டு முழு அதி காரத்தை ஒன்றிய அரசே வைத்துக்கொள்ளும் நிலை ஜனநாயகத்தை கேலிக்கூத் தாக்குகிறது.

இவ்வாறு இரா.சிவா பேசினார்.

தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய பா,ஜ.க. அரசைக் கண்டித்து

நெல்லை மத்திய மாவட்டத்தில் ஒன்றியங்கள் தோறும் ஆர்ப்பாட்டம்!

மாவட்டப் பொறுப்பாளர் மு. அப்துல்வகாப் எம்.எல்.ஏ. அறிக்கை!

நெல்லை, மார்ச் 28-

கழகத் தலைவர் அவர்க ளின் அறிவுரைக்கிணங்க ஒன்றிய அரசு கடந்த நான் கரை மாதங்களாக 100 நாள் வேலை உறுதி திட்டத்திற்கு தமிழ்நாட்டிற்கு தரவேண் டிய ரூபாய் 4034 கோடி அளவுக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்ட நிதியை வழங் காத ஒன்றிய அரசை கண் டித்து நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப் பாட்டங்கள் நாளை (29 ஆம் தேதி) ஒன்றிய கழ கங்களில் நடைபெறுகிறது. என நெல்லை மத்திய மாவட்ட பொறுப் பாளர் மு.அப்துல் வகாப் எம். எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

அதில் அவர் தெரிவித் திருப்பதாவது.

தமிழ்நாட்டை தொடர்ச்சியாக வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அர சைக் கண்டித்து தி.மு.க. சார்பில் அனைத்து ஒன்றி யங்களிலும் நாளை (29.3.2025-சனிக்கிழமை) அன்று "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" நடத்திட வேண்டும் என்ற கழகத் தலைவர் அவர் களின் அறிவுரைக்கி ணங்க,கடந்த நான்கரை மாதங்களாக தமிழ்நாட் டிற்கு தரவேண்டிய ரூ.4034 கோடி அளவுக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட (MGNREGA) நிதியை வழங்காமலும், மாற்றாந்தாய் மனப்பான் மையுடன் தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அர சைக் கண்டித்து நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் நாளை (29.3.2025 -சனிக்கிழமை) அன்று காலை, மானூர் மேற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் மானூரிலும், மானூர் கிழக்கு ஒன்றியத்தின் சார் பில் கங்கை கொண்டானி லும்,மானூர் தெற்கு ஒன்றி யத்தின் சார்பில் சுத்தமல்லியிலும்,100 நாள் வேலைவாய்ப்பால் பயன் பெறு வோரைத் திரட்டி "மாபெரும் கண்டன ஆர்ப் பாட்டம்"நடைபெறும்.

இக்கண்டன ஆர்ப்பாட் டத்தில் நெல்லை மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட, மாநகர, கழக நிர் வாகிகள்,பகுதி, பேரூர்,ஒன் றிய, கழக நிர்வாகிகள் வட்ட, கிளைக் கழக நிர்வா கிகள்,சார்பு அணிகளின் நிர் வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள் உள்ளிட்ட அனைவ ரும் கலந்து கொண்டு ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட கேட் டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரி வித்துள்ளார்.

முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க நெல்லை மாவட்ட முன்னாள் செயலாளர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மறைந்த வீ.கருப்பசாமிபாண்டியன் உடலுக்கு நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ. தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. ஆகியோர் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.உடன் மேயர் ராமகிருஷ்ணன்,துணை மேயர் ராஜ், மாவட்ட துணைச் செயலாளர் சுரேஷ், ஒன்றிய செயலாளர் அருள்மணி, வழக்கறிஞர் தினேஷ் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.